

யா/ நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்
இல.101, பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட,
இருமரபும் தூய தனிநாயக முதலியார் வழித்தோன்றலும் ஆகிய

**அமரர்கள்**

# நாகனாதி பாலசிங்கம்
# பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை

ஆகியோரின் விண்ணுலகப்பேறு குறித்த,

# நினைவு மலர்

**16.10.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யா/ நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்
இல.101, பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட,
இருமரபும் தூய தனிநாயக முதலியார் வழித்தோன்றலும் ஆகிய

**அமரர்கள்**

# நாகனாதி பாலசிங்கம்
# பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை

ஆகியோரின் விண்ணுலகப்பேறு குறித்த,

# நினைவு மலர்

**16.10.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**எம் இதய தெய்வங்களுக்கு**

# சமர்ப்பணம்



பாசமிகு குடும்பத்தின் தலைவராய், தலைவியாய்,
வழிகாட்டியாய் வளம்கொழித்திட வாழ்ந்த
நல்லறம் காட்டி வழி நடத்திய தெய்வங்களே!
உங்களைப் பிரிந்து எங்கள் மனங்கள்
நொந்து வாடி தவித்தபோதும்
உங்கள் ஆத்மா நெழுவினியான் திருப்பாதங்கள்
அமையுற வேண்டி இம்மலரை
உங்கள் பாதார விந்தங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மலர்வு*
**10.05.1942**

*மலர்வு*
**12.06.1940**

**உதிர்வு: 22.04.2023**

## அமரர்கள்
# நாகனாதி பாலசிங்கம்
# பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை
## அவர்களின்

*திதி வெண்பா*

சோபகிருது வருடம் சித்திரை மாதம் ஒன்பதாம் நாள்
முன் நிலவு பூண்ட பூர்வபக்க துதியைத் திதியில்
பூவுலகம் போற்றும் புண்ணியனார்கள் நாகனாதி பாலசிங்கம்
பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை என்னும்
பேராளர்கள் நிலையில்லா வாழ்வகற்றி நெழுவினியான்
திருப்பாதம் சென்றடைந்த நாளதாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத்திரட்டு



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளை யைப்பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை யிர் மறந்தாலும்
உயிரை மேவிய வுடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சக் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்ற வத்த ருள்ளிருத் தோங்கும்
நமச்சி வாயத்தை நான் மறவேன்.

## திருவாசகம்

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு
தனைச்சிறிது மறியாதே தளர் வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டேன் பிறப்பறுத்து இணையிலியை
அனைத்துலரும் தொழுதில்லை அம்பலத்தைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத்துரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டும் கேட்டும்
கடந்தன கடவநானெல்லாம்
விண்ட தாமரைமேல் அன்னம் வீற்றிருக்கும்
வெளியுற வீதி வெண்காடா
அண்டரே காண அம்பலத்தாடும் ஐயனே
உய்யுறமாறருளே.

## திருப்பல்லாண்டு

நிட்டையாலா உடல்நீத்து என்னை ஆண்ட
நிகர் இலாவண்ணங்களும்
இட்டன் சிவன் அடியாரைசீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என்அகம் நெகஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத்தன்பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

உம்பர் தரு தேனுமணி கசிவாகி
ஒன்கடலில் தேனமுத துணர்வூறி
இன்ப ரசத்தே பருதி பலகாலும்
எந்தனு யிர்க் காதரவுதருவாயே
தம்பிதனக்காக வெனத் தனையோனே
தந்தை வலத்தால் அருள்கை கனியேபானே
அன்பர் தமக்கானநிலை பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நெடுந்தீவு மேற்கு
## நெழுவினி சித்திவிநாயகர் திருவுஞ்சல்

காப்பு

சீர்பூத்த வேதசிவா கமங்க ளோங்கி
திகழுமியாழ்ப் பாணநகர்க் கொருசார்பாகி
நீர்பூத்த நெடுந்தீவிற் குடபா லோங்கு
நெழுவினியிற் சித்திவி நாயகர் தம்மீதிற்
பேர்பூத்த ஊஞ்சலிசை யினது பாட
பிறைபூத்த சடைமவுலிப் பிரமம் ஓங்க
கார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோங்க
கடம்பூத்த கணபதி தான் காப்புத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமேவு நான்மறையுங் கால்களாகப்
புரையிலும் வேதமெழிற் சட்டமாக
பாமேவு முபநிடதம் பலகை யாகப்
பரவுமென் கலைகளுயர் கயிறதாக
மாமேவு சிவாகமமே விட்டமாக
மருவு பிரணவமாகும் மஞ்ச மீது
தேமேவு சோலைநெழுவினியில் வாழுஞ்
சித்தி விநா யகமுதலே யாடீரூஞ்சல்

ஆதாரா சத்தியோடு மனந்த னேந்து
மதன் தன்மை பீடமுறு பதும மீதில்
தாதாரும் வாமாதி சத்தி போற்றத்
தயங்குரவி மதியனல்நல் சத்தியாகும்
மீதான மண்டல்தின் மேலே தங்கி
மெய்யடியார்க் கடியர்பவ வினைகளான
தீதான திரியநெழுவினியில் வாழுஞ்
சித்தி விநா யகமுதலே ஆடீரூஞ்சல்

அரிபிரமர் மலர்சிதற வமரர் கோனு
மழலவனு மடப்பையொடு தீபந் தாங்க
வருநிருதி யமனுடை வாள் பிரம்பொடோங்க
வருண னொடு வளிசிபெறி வட்டமேந்த
இரவிசசி கவிகைகோ டங்கிபோல் மேவ
இயக்கர் பதி யீகான னமரர் போற்றத்
திருமறைமா முனிவரர் கரவென் றேந்திச்
சித்தி விநா யகமுதலே ஆடீரூஞ்சல்

அந்தரதுந் துபிமுளங்க வியங்களார்ப்ப
அமரர்மறை முனிவர்திரு மலர்கள் தூற்ற
பந்தமது தும்புருநா தர்கள் பாடப்
பரிவீனொடு மரமகளிர் நடன மாட
வந்தரம்பை ஊர்வசிவெண் கவரி நீட்ட
மகிழ்ந்து திரிவத் தமையருகே வடந்தொட்டாட
சிந்தையருள் நெழுவினியில் வாழுஞ்
சித்தி விநா யகநிதலே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனே யுமைமகனே யாடீ ரூஞ்சல்
அருளொளுகு கயமுகனே யாடீ ரூஞ்சல்
சங்கரநாதர் திருமகனே யாடீ ரூஞ்சல்
சதுர்வேத முழுமுதலே யாடீ ரூஞ்சல்
திங்குபுவி நீரனல்கால் விசும்பொடான்மாச்
சசியிரவி மென்னுமட்ட மூர்த்தி யாகுந்
திங்களணி திருமுடியா யாடீ ரூஞ்சல்
சித்தி விநா யகமுதலே ஆடீரூஞ்சல்

அந்தணரா வினமரசர் வணிகர் வாழி
அவனிமழை பொழிந்து வேளாளர் வாழி
புந்திமகிழ் சிவனடியார் ரெவரும் வாழி
பொரு வீல்வை சித்தாந்த நெறியும் வாழி
செந்திருநர் மகளருளிக் கெங்கும் வாழி
திரு நீறும் மஞ்செழுத்துஞ் சிறந்து வாழி
சிந்துவளர் நெடுந்தீவில் லடியார் வாழி
சித்தி விநா யகரடிகள் வாழி வாழி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள்

# நாகனாதி பாலசிங்கம்
# பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை

அவர்களின் வாழ்க்கைப் பயணம்

ஈழத்திருநாட்டின் நாற்புறமும் கடலால் சூழப்பட்டு, நீரினலைகள் தாலாட்டும் நித்திலம் என புகழ் பெற்று, நீர் வளமும், நில வளமும், பசும்புற்றரைகளும் வற்றாத கிணறுகளும் ஒருங்கே சேர்ந்து பனை, தென்னையுடன் எங்கும் கிடைக்காத அரியவகை மூலிகை வளங்களோடு பாலினை பொழிந்திடும் பசுக்களும், குதிரைகள் கூட்டமும், மாண்புறு மன்னர்கள் வாழ்ந்த வெடியரசன் கோட்டையும், கவியோடு கவியழகும் கற்றறிந்த அறிஞர்களும் பண்பாளர்களும் வந்தோரை வரவேற்கும் பண்புடைய மக்களும், மாவீரர்களும், மக்களைக் காத்திடும் மாண்புறு ஆலயங்களும் கல்விச் சாலைகளும் ஒருங்கே சேரப்பெற்ற இயற்கை வனப்புடன் திகழ்கின்ற சப்த தீவுகளில் ஒன்றான நெடிய தீவு ஆகிய நெடுந்தீவு நெழுவினி எனும் பொற்பதியில் சூரியன் அஸ்தமிக்கும் மேற்கினிலே நெழுவினி விநாயகர் அமர்ந்து இருந்து அருள் பாலிக்கும் நெழுவினியான் கோயிலுக்கு அருகாமையில் இருமரபும் தூய தனிநாயக முதலியார் வழித்தோன்றலில் வந்த நாகனாதி அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு இப்புவிதனிலே இரண்டாவது செல்வப்புதல்வனாக 10.05.1942 இல் அவதரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடன் கூடவே மூத்த அக்காவாக சிந்தாமணியும், இளையவர் களாக புவனேஸ்வரி, கடாட்சம், சிரோன்மணி, வைத்தியலிங்கம், சபாரத்தினம், லோகேஸ்வரி ஆகியோரை உடன்பிறப்புக்களாகக் கொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்றார். இவரின் திறமையின் நிமித்தம் உயர் கல்வியை யாழ்.நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பதற்காக இணைந்து கொண்டார். கல்வி கற்கும் காலத்தில் பாடசாலையில் நடைபெறுகின்ற பேச்சுப்போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி சிறந்து விளங்கினார். இவர் மாணவத் தலைவராக நியமிக்கப்பட்டு, எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். பாடசாலை அதிபர் திரு நவரத்தினசிங்கம் அவர்களால் பாலா என்று அன்போடு அழைக்கப்பட்டு வந்தார். இவரின் நேர்மையான செயற்பாடுகளால் ஆசிரியர் மாணவர்களின் பாராட்டையும் பெற்றார்.

இவர் க.பொ.த.சாதாரண தரத்தில் ஒரே தடவையில் சிறப்பு சித்தி களைப் பெற்றுப் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். விவசாயத்தில் கூடிய ஆர்வம் காட்டியதால் அவரின் விவசாய அறிவை மேம்படுத்துவ தற்காக வவுனியா அரசினர் விவசாயப் பாடசாலையில் ஒருவருட விவசாய கற்கை நெறியில் தெரிவு செய்யப்பட்டு விவசாய கல்வியைப் பெற்றார். அங்கு நடைபெறும் பரீட்சையில் தரம் I பிரிவில் சித்தியெய்தி பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

விவசாயத்தின் மேல்வைத்த ஆர்வத்தின் காரணமாக வவுனிக் குளம் பெரும் நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள இடது கரை திட்டத்திற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டார். இவரின் தந்தையாரோடு தானும் வவுனிக்குளம் இடது கரைக்குச் சென்று காடு வெட்டி துப்புரவு செய்து முன்னோடி விவசாயியாகத் திகழ்ந்தார்.

அக்காலகட்டத்தில் அவரின் தாய் மாமனாரான இராமலிங்கம் அன்னப்பிள்ளையின் பிள்ளைகளான நாகம்மா, பூரணம், கந்தையா, பொன்னம்மா, நாகரத்தினம், நாகசுந்தரி, கண்மணிப்பிள்ளை, சிந்தாமணி ஆகியோரில் கடைசிக்கு மூத்த மகளான கண்மணிப்பிள்ளையை (பூமணி) கரம்பிடித்து இனிதே இல்லற வாழ்வை நடாத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செல்விருந்து ஓம்பி

வருவிருந்து காத்திருப்பது போன்று” வீடு தேடி வருவோர்க்கு உணவளித்து மகிழ்ந்து வந்தனர். ஏழை, எளியவர்கட்கு உதவி செய்வது இவர்களின் இயற்கை பண்பாகும்.

இல்லறத்தின் நற்பயனாக ஜெயபவான் (ஜீவா) என்னும் அழகனையும் சுபாஜினி (றாஜி) என்ற நற்குணவதியையும் பெற்று அவர்களை கல்வி, கேள்விகளில் உயர்வடையச் செய்ய மூத்த மகனான ஜீவாவை ஸ்ரான்லிக் கல்லூரியிலும், மகளான றாஜியை ஸ்ரான்லிக் கல்லூரியிலும் உயர்கல்வி கற்பதற்காக அனுப்பி வைத்தனர். இவர்கள் இருவரும் ஆரம்பக்கல்வியை முல்/ பாண்டியன்குளம் மகாவித்தியா லயத்தில் கல்வி கற்றனர்.

சகோதரர்கள் நற்பிரஜைகளாக வரவேண்டும் என்ற ஆவலுடன் சகோதரர்களுக்கு கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்தார்.

மூத்த அக்காவான சிந்தாமணியை கணபதிப்பிள்ளைக்கும், இளையவர்களான புவனேஸ்வரியை பேரம்பலத்திற்கும், கடாட்சத்தை சகுந்தலா தேவிக்கும் சிரோன் மணியை சிவதாசுக்கும், வயித்திலிங்கத்தை குணலட்சுமிக்கும், சபாரட்ணத்தை ஜெயந்திக்கும், இளைய சகோதரியான லோகேஸ்வரியை நடராஜலிங்கத்திற்கும் திருமணம் செய்வித்து மகிழ்ந்து இருந்தார்.

சமூகத் தொண்டனாகத் திகழ்ந்த வேளையில் பனங்காமம் பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றி வந்தார். அவரின் அயராத மக்கள் சேவையால் பனங்காம்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெல் கொள்வனவு முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்டு பெருந் தொகையான நெல் கொள்வனவு செய்து மக்களின் பாராட்டைப் பெற்றார். இவரின் சமூக சேவை காரணமாக பாண்டியன்குளம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக நீண்ட காலம் சேவையாற்றி வந்தார். ஆலயத் தொண்டிலும் பொது வேலைகளிலும் ஆர்வம் உடையவராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தார். பாண்டியன்குளம் விநாயகர் ஆலய திருவிழா உபயகாரரா கவும் செயற்பட்டு இறை பக்தியாளனாகத் திகழ்ந்தார்.

நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் மேல் தீராத பக்தி கொண்டவர். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் திருவிழாவில் மனைவி, சகோதரர்களோடு, சென்று வழிபடுவதில் ஆர்வம் காட்டி வந்தார்கள். கடைசியாக இம்முறை நடந்த தேர்த் திருவிழாவுக்கு மனைவியுடன் மூத்த அக்காவான மணி அக்கா அவரின் மகன் சுரேஸ், கலா, பேரப்பிள்ளைகள் இளைய சகோதரன் சபாரட்ணம் அவரது மனைவி ஜெயந்தி ஆகியோ ரையும் மைத்துனிமாரான பூரணம், நாகரத்தினம் ஆகியோரையும் ஒன்றாக அழைத்துக் கொண்டு படகில் பிரயாணம் செய்து நெழுவினியான் தேர்த்திருவிழா உற்வசத்தில் நேர்த்திக்கடன் செய்து இறையருள் பெற்றார்கள்.

சகோதரர்கள், மைத்துனி, மைத்துனர் மேல் அழிவற்ற பாசத்தைக் காட்டி மகிழ்வார். எங்கு சென்றாலும் இருவரும் இணைபிரியாமல் இருப்பதைக் கண்டு மகிழாதோர் எவரும் இல்லை.

திருமதி பாலசிங்கம் (பூமணி) அவர்கள் மைத்துனரைக் திருமணம் செய்வதற்கு முன்னர் தனது மூத்த சகோதரியான பூரணத்துடன் மன்னார் நாகத்தாழ்வில் வசித்து வந்தார். அவர் நெசவு ஆசிரியராக மன்னாரிலும் பின்னர் திருமணம் செய்த பின்னர் இரண்டாம் யூனிற் வவுனிக்குளத் திலும் நெசவு ஆசிரியராக கடமைபுரிந்தார். இவர் அமைதியான குண இயல்பு உடையவர். கருணை உள்ளம் கொண்டவர். மற்றோருக்கு உதவி செய்வதிலும் விருந்தோம்புவதிலும் இல்லத்தரசியாகத் திகழ்ந்தவர்.

பிள்ளைகள் இருவரும் கல்வியில் சிறந்து விளங்கி மணப்பருவம் அடைந்த வேளையில் மகனான ஜீவாவிற்கு சகோதரியின் மகளான சுமணாவை திருமணம் செய்வித்து மகிழ்ச்சி அடைந்தார்கள். மகளான ராஜியை பண்புடையோன் பரமானந்தம் என்னும் பரணிக்கும் திருமணம் செய்வித்து மகிழ்ச்சி அடைந்தார்கள். இரண்டு பிள்ளைகளையும் இரண்டு கண்கள் போல கண்ணை இமை காப்பது போல் காத்து போற்றி மகிழ்ந்து வந்தார்கள். பேரப்பிள்ளைகளாக கேதுசன், கோபிநாத், வினோஜாவையும் ஆசை மகன் ஜீவாவின் மகளான அட்சகியையும் அன்புடன் அரவணைத்து மகிழ்ந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தம்பியான சபாரட்ணம் என்பவரின் வீட்டில் இருந்து நெடுந்தீவுக்கு மைத்தினிமாரான பூரணம் நாகரத்தினம், நாகசுந்தரி ஆகியோரைச் சந்தித்து மகிழ்வதற்காக 21.04.2023 வெள்ளிக்கிழமை முச்சக்கரவண்டியில் தம்பியின் உதவியுடன் யாழ்.பஸ் நிலையம் அடைந்தார்கள். "போய்வருகிறேன் தம்பி" என்று கூறிவிட்டு கடைசிப் பயணம் இதுவென தெரியாத அன்பு உள்ளங்கள் விடை பெற்றுச் சென்றார்கள். அவர்களின் சிரித்த முகத்தையும் சிங்காரப் பேச்சையும் பார்த்து இன்புறுவோம் என்ற வேளையில், கொடியவனின் கோரச் செயலால் எமது உறவுகள் பூரணம் நாகரத்தினம், நாகசுந்தரி, பூமணி, பாலசிங்கம் மகாதேவா ஆகியோர் 22.04.2023 சனிக்கிழமை உலகையே சோகத்தில் அதிரவைத்து உற்றார், உறவினர்கள் கண்ணீர் மல்க எம்மை எல்லோரையும் விட்டு நெழுவினியான் திருப்பாதம் சென்றடைந்தார்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தின்பால் வாழ்ந்த எங்கள் அண்ணாவே!

நெடுந்தீவின் பெரிய தனவந்தர் அப்பாக்குட்டி நாகனாதரிற்கும், அன்னப்பிள்ளைக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்து, ஆரம்ப பாட சாலையை நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் காலத்தில் இருந்தே தந்தையாரிற்கு உறுதுணையாகவும், தன் வயதிற்கும் மேம்பட்ட உதவிகளைச் செய்து வந்தார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கிணங்க உயர் கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்கும் காலத்தில் அக்கால அதிபராக இருந்த ஊ.ஏ நவரத்தினசிங்கம் அவர்களால் பாராட்டப்பட்ட நல்ல மாணவனாக நல்ல தேர்ச்சியும் பெற்றார். அதனைத் தொடர்ந்து வவுனியா விவசாயப் பாடசாலையில் ஓராண்டு பயிற்சியை முடித்து வெளியேறினார். அதே காலகட்டத்தில் வவுனிக்குளம் குடியேற்றத்திட்டத்தில் கிடைத்த காணியால் எங்கள் குடும்பத்தோடு வன்னி நோக்கி நகர்ந்தோம். அண்ணரின் கடின உழைப் பினால் எங்கள் குடும்பத்தின் பெரிய பொறுப்புக்களை தன்தோழில் சுமந்து பாடுபட்டார். அக்காலகட்டத்தில் எங்கள் தாய்மாமன் மகளான கண்மணிப் பிள்ளை (பூமணி) யைத் திருமணம் செய்ததினால் பாசமான அண்ணியும் கிடைத்தார். சமகாலத்தில் பனங்காமம் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளராக கடமையை ஏற்றுக்கொண்டு சிறந்த நிர்வாகியாகவும், நல்ல பண்பாளராகவும் இருந்ததினால் அப்பகுதி மக்களால் N.பாலசிங்கம் என்று விளித்துக்கூறி பெருமைப்பட்டனர். பாண்டியன் குளத்தைச் சுற்றியுள்ள அயல்கிராம மக்கள் பாண்டியன் குளம் வரும்போது அண்ணா வீட்டிற்கு வந்து இளைப்பாறிச் செல்லும் காட்சியை இன்றும் நினைத்துப் பார்க்கிறோம். அண்ணரின் இறப்பு வீட்டிற்கு வந்த பெரும் தொகையான மக்கள் பட்ட வேதனையையும், அண்ணியின் விருந்தோம்பல் பண்பையும் சொல்லி அழுத காட்சி இன்றும் எம் கண்முன்னே நிற்கின்றது. எல்லாவற்றையும் தாண்டி அவரின் வாழ்வின் பெரும் பகுதியை பொது வேலைக்கும், இறை வழிபாட்டிற்கும் செலவழித்து வாழ்ந்த உத்தமர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் அமைத்த பாதையிலே நெடுந்தூரம் வந்துவிட்டோம். ஆனாலும் எம்மனது ஆறாது அண்ணாவே.

உன் இதயத்தை இறைவனிற்கும், செல்வத்தை ஏழைகட்கும் கொடுப்பாயாக என்ற முதுமொழிக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய பெருமகனார். துயர் வரும்போது துணை நிற்பாயே! அருகிலிருந்து ஆறுதல் சொல்ல யாருமின்றித் தவிக்கின்றோம். பார்போற்ற நீர் செய்த பலன்கள் எல்லாம் உமைக் காக்க இறைவனை வேண்டி நிற்கிறோம்.

"மனிதன் இயன்றதைச் செய்வான் இறைவன்
தான் நினைத்ததைச் செய்வான்"

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
**சகோதரன் செல்வா**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தாயின் வயிற்றில்
## உதித்த செல்வர்கள்
## ஒரு நொடியில் சென்றதேனோ?

பசுத்தீவாம் நெடுந்தீவின்
வந்தோரை வரவேற்கும் மாவிலித்துறையில்
இராமலிங்கம் அன்னப்பிள்ளையின்
அன்பு மகளாக பிறந்த எங்கள் பூமணி அன்ரி!
அலை வந்து தாலாட்டி,
அன்னை மடி பாலூட்ட
ஆனந்தமாய் வாழ்ந்து,
அத்தை மகனாம் பாலசிங்கம்
சித்தப்பாவை கரம்பிடித்து
வன்னியிலே வாழ்க்கையைத் தொடங்கி
ஜீவா, ராஜி இருவரையும் பெற்றெடுத்தீர்கள்.
அவனியில் உதித்த மலர்களை
இறைவன் தனதாக்கிக் கொண்டான்.
நெமுவினியானும் அழைத்துவிட
சகோதரப்பற்றுக் கொண்டு
நெடுந்தீவு நோக்கி இருவரும் சென்றீர்கள்
ஒரு தாயின் வயிற்றில் உதித்த செல்வங்கள்
ஒன்று கூடி ஆனந்தமாய் இருக்கையிலே
எங்கிருந்தோ வந்தான் இயமன்
ஒரு நொடியில் கொன்றதேனோ
விடை தேடி நாங்களும் வினாவுகிறோம்
உங்கள் பிரிவால் ஏங்கி தவிக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
**செல்வன்,யோகி குடும்பம்**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசைத்தம்பி அருமை அண்ணா!

அன்புத் தம்பியே! ஆசை அண்ணாவே! எங்களை விட்டு பிரிந்தீர்கள். எமது மனம் ஏங்குகின்றது. உங்கள் நினைவை நித்தம் சுமந்து வாடுகின்றோம். எங்கள் வாழ்வில் ஒளி விளக்காய் இருந்து ஆலோசனைகள் பல தந்து அறிவுரைகள் பல சொல்லி ஆனந்தமாய் வாழ்ந்து வந்தோம். எள்ளளவும் நினைக்கவில்லை எங்களை விட்டு பிரிவீர்களென. நாங்கள் எட்டுப் பேரும் ஒன்றாய் இருந்தோமே அண்ணா! பொய்யாகாதோ இச்செய்தி என நினைத்தோமே. மெய்யாகி விட்டதண்ணா. இனி என்ன செய்வோம்! எப்பிறப்பில் காண்போம்! இனி.

அன்பு அண்ணியே ஆசையாய் எங்களை அழைக்கும் குரல் காதினில் ஒலிக்கின்றது. உங்களின் அமைதியான, சாந்தமான குணம் எங்கள் மனதை விட்டு அகலாது இருக்கின்றது. தாயாக, அண்ணியாக, சகோதரியாக திகழ்ந்தீர்கள். நீங்கள் இருவரும் எங்களை விட்டு எங்கு சென்றீர்கள். தவிக்கின்றோம் நாம் இங்கே. நெழுவினியான் திருப்பாதத்தில் உங்களுக்கு நித்திய சுகம் கிடைக்க நெழுவினியானை வேண்டி இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
**சகோதரிகள்**
**சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சுவாசமே அம்மம்மா!
# எமது மூச்சுக் காற்றே தாத்தா!

எம் உயிர் காற்றை நீங்கள் எடுத்து சென்றது ஏனோ?
இன்னும் உங்கள் மடிகளில் கொஞ்சி விளையாட
ஏங்கித் தவிக்கின்றோம்.

நீங்களே கதி என்று நம்பி இருந்த எம்மை பாதி
வழியால் கதறவிட்டுச் சென்றது- ஏனோ?

சொந்த ஊரான நெடுந்தீவு செல்வதாக கூறி
சொந்தங்களை விட்டு நெடுந்தொலைவு சென்றது - ஏனோ?

அருள் வேண்டி திருவிழாவுக்கு சென்ற உங்கள் வாழ்வை
இருள் சூழ்ந்து கொண்டது - ஏனோ?

உங்கள் வாழ்க்கையை முடித்து கொள்ளாதவன் எமன்
கள்வனாய் காத்திருந்தானோ - என்னமோ

எம் வாழ்வின் அத்திவாரம் என்று எண்ணி இருந்தோமே
இன்று அடிமரமாய் சாய்ந்து கிடப்பது - ஏனோ?

தோள்களில் சுமந்து கதைகள் பல கூறினீர்களே - தாத்தா
அம்மா அடித்தால் ஓடோடி வந்து? உங்களை - அம்மம்மா

பள்ளிவிட்டு வந்தால் சாப்பிட்டியா! என்று கேட்கும் - தாத்தா'
கேட்காமலே சாப்பாட்டை போட்டு ஊட்டுவியே - அம்மம்மா

இன்று உங்கள் வீட்டை தேடி ஓடோடி வரும்போது
எம்மை அரவணைக்கும் அன்பு கரங்கள் எங்கே!

இத்தனை சொத்துக்கள் சேர்த்து வைத்து சென்றீர்களே!
எங்கள் நிரந்தரமான சொத்துக்கள் நீங்கள் தான் என்று எண்ணாமல்

இன்று எம்மை சாப்பிட்டியா என்று கேட்க யாருமே இல்லை.
இல்லாமல் அனாதையாக தவிக்கின்றோம்.

எம்மை தனியாக தவிக்கவிட்டு நெஞ்சங்களை கலங்கவிட்டு
தொலைதூரம் சென்றது - ஏனோ?

எம் கண்களில் வரும் கண்ணீரை துடைக்க - உங்கள்
கரங்களை நாம் எப்போது காண்போமோ?

உங்கள் பாசத்தை எண்ணி ஏங்கித் தவிக்கும் பேரப்பிள்ளைகள்
**கேதுசன், கோபிநாத், வினோஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கொடியில் பூத்த மலர்கள் நாங்கள் அண்ணா!

ஒரு கொடியில் பூத்த எட்டுப் பூக்கள் - நாம்
ஒன்றாய் ஒற்றமையுடன் வாழ்ந்திருந்தோம்
உம்முடைய அழகிய வதனம் காணாது
தவிக்கின்றேன் - அண்ணா - எமது
குடும்பத்தில் தலை விருட்சம் சாய்ந்ததேனோ...?

அன்பையும், பண்பையும், பாசத்தையும்
அணிகலன்களாய் பூண்டவரே என் அண்ணா!
அருமை மிகு மனைவியுடன் அன்புடன்
வாழ்ந்து வரும் வேளை....

ஆசை மிகு மகனையும் அன்பு மகளையும்
அளவுக்கதிகமாய் நேசித்தாய் - அண்ணா
மக்களை இழந்து தவித்து நின்ற போதும் - நாம்
பல கதைகள் கூறி உம்மை சமாதானப்படுத்தியிருந்தோம்
பத்து நாட்கள் காணாவிட்டால் எங்கே போனநீ
என்று கேட்பீர்கள்.
என்னைக் கண்டவுடன் ஆச்சி வாறா என்று
அரவணைத்துப் பார்ப்பீர்கள்.

என் அண்ணா அண்ணியின் இழப்பிற்குப் பின்
என் துணையையும் இழந்து இப்போ தனிமரமாய்
தவிக்கின்றேன் அண்ணா

நீங்கள் அனைவரும் விண்ணுலகிலும்
ஒன்றாகக் கூடி மகிழ்வீர்கள் என எண்ணி மன மகிழ்கின்றேன்.

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!***

சகோதரி - **பே. புவனேஸ்வரி**
(இல.136, பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புத் தம்பிக்கு
# ஓர் மடல்!

என் அன்புத்தம்பி அறிவது நான் நலம்.
எங்களை விட்டு எங்கு சென்றாய்?
எட்டுப் பேரும் ஒன்றாக வளர்ந்து உணவு உண்டு மகிழ்ந்தோமே!
இன்பம், துன்பங்களில் ஒருவனாய் ஒளிவிளக்காய் திகழ்ந்தீரே
"அக்கா" என்று அழைக்கும் குரல் என் காதில் ஒலிக்கின்றதே!
N. பாலசிங்கம் என்றால் சிறுவர் தொடக்கம் முதியவர் வரை அறிவார்களே!
இளமையில் மண்சோறு விளையாடி ஒன்றுகூடி ஓடித்திரிந்தோமே
நெடுங்கேணி நெழுவினிப்பிள்ளையார் கோவில் வீதியில் ஒன்றுகூடி
உலா வந்ததை மறப்பேனா.
எங்கள் குடும்பத்திற்காக உழைத்த உத்தமனே
எங்கு சென்றாய் எம்மை விட்டு
நீண்ட தூரம் சென்றுவிட்டாய்.
எங்களால் உங்களை மறக்க முடியவில்லையே
என்கனவில் நித்திலம் வந்து தோன்றுவாயே
நினைவுகள் எல்லாம் நனவாகாதோ என்று எண்ணுகின்றேன்.
மருமகன் ரவி, ரகு,சுரேஸ், மருமகள் உமா, சியா
மாமா, மாமி எங்கு சென்றீர்கள் என்று ஏங்குகின்றனர்.
சிறுவனாய் இருந்த வேளை சித்துக்கள் காட்டினாயே!
ஓடி விளையாடி உல்லாசமாய் இருந்தோமே.
நெழுவினியான் திருவிழாவிற்கு ஒன்றாக சென்று
ஊர் சுற்றி வலம் வந்தோமே.
பூமணி மச்சாள் என் உள்ளம் கொள்ளை கொண்ட உத்தமி.
அமைதியின் உறைவிடம். அன்பில் அரவணைப்பில் ஒரு தாய்.
வந்தோரை வரவேற்கும் பண்புடையாள்.
மாமி, மகள் பூமணியே என் தம்பியுடன்
சேர்ந்து மாணிக்கம் மச்சாள், செல்லம் மச்சாள்
பூரணம் மச்சாள் எல்லோரையும் அழைத்துக்
கொண்டு கொடியவனின் கோரத்தாண்டவத்தில்
அகப்பட்டு மேலுலகம் சென்றீர்களோ?
மீளாதா உங்கள் உயிர?
வேதனையில் வாடும்.

உங்கள் சகோதரி / மைத்துனி
K. **சிந்தாமணி**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாச தீபங்கள் இரண்டு அணைந்ததுவே!



நேற்றுவரை எம்மோடு இருந்தீர்கள்.
எங்களில் ஒருவராய் எம்மோடு அன்போடு வாழ்ந்தீர்கள்.
காலமெல்லாம் எங்களைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க,
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு போனீர்களே!
உங்கள் நினைவுகளை மீட்டும்போது எம்
கண்ணில் கண்ணீர் ஊற்றாகி ஓடுதய்யா
எங்கள் அன்பு மாமா, மாமி எங்களை விட்ட எங்கு சென்றீர்கள்?
பாசத்தோடு வளர்த்தீர்கள், குலவிளக்காய் கோபுரமாய் திகழ்ந்தீர்கள்
எங்கள் உயர்விற்கு வழிகாட்டியாய் திகழ்ந்த மாமா, மாமி.
கொடியவனின் கொரூரச் செயலால் எங்கள் கனவுகள்
கரைந்து சென்றதேனோ?
ஈசன் திருவடி காண அவசரம் கொண்டு சென்றுவிட்டீர்களா?
எங்களின் சோகத்தை எங்கு தொலைப்பது?
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோர்க்கும் நல்லவர்களாய் வாழ்ந்தீர்கள்.
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம் தந்த
உங்களை நினைக்கையில் உள்ளம் கனக்கின்றது
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் - எங்கள்
முன்னே உங்கள் இருவர் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்ணை விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கி சென்றாலும் - எம்
கண்ணை விட்டு மறையாமல்
கனகாலம் எம் இதயத்தில் இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் கண்ணீர்த்துளிகளை
உதிரும் பூக்களாக சமர்ப்பிக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

உங்கள் அன்பு மருமகன்
K. **ரவீந்திரகுமார் (ரவி)** – (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையிலே
## அவன் பெரியப்பன்!!!

மனிதனின் நினைவுகள் விலைமதிப்பற்றவை. நாம் அனைவரும் எத்தனை காலங்கள் ஆனாலும் சிலவற்றை மறப்பதில்லை. மனிதமூளை உணர்வுகளுடன் உடன்பட்டது. எம்மால் இன்றும் பல நினைவுகளை நினைவு வைத்திருக்க முடிகின்றது என்றால் மனித மூளை எம் உணர்வுகளுடனும் நாம் கேட்ட சில எம்மால் மறக்க முடியாத சந்தங்களுடனும் நாம் உண்ட பல சுவையான கசப்பான, உணவுகளின் ருசிகளுட னும் கொண்டுள்ள தொடர்புகளால்தான்.

எனக்கு இன்னமும் நினைவிருக்கின்றது என் தகப்பனின் MD 70 பைக்கில் எனக்காக முன் வைக்கப்பட்ட தலையணையால் ஆன ஆசனத் தில் கம்பீரமாய் நான் அமர்ந்திருந்து புழுதி பறக்க செம்மண் வீதியினால் பாண்டியன்குளம் சென்றது. யானை வரும் என அப்பா சொல்லும் கதைகள் தொடக்கம் என் பாலசிங்கம் வீடு எது என்றால் இங்கு யாரும் சொல்லுவார்கள் என்ற கதை வரை அது. நில பூச்சு பூசப்பட்ட வாசல் கதவு அன்றைய காலகட்டத்தில் ஒப்பீட்டு ரீதியில் ஊருக்குள் அமைந்துள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய கல்வீடுகளில் அதுவும் ஒன்று. பாதையின் முடிவில் இருந்து நீர் ஓடுவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் மேல் போடப்பட்ட கொங்கிரீற் பாலத்தை தாண்டியே பெரியப்பாவின் வீட்டிற்கு செல்ல வேண்டும். 20 வருடங்களின் பின்பும் நான் இன்று பாண்டியன்குளம் செல்லும்போதும் அதை ஞாபகம் வைத்தே அவர் வீடு "ராஜி அக்கா" வீடு சென்றதுண்டு.

உழைப்பிற்கு அடையாளமாய் வாசலிலே நிற்கும் சிவப்புநிற Tractor எங்கு திரும்பினாலும் பச்சை நிறமே தெரியும் பல வகையான பலன்தரு மரங்கள் அவர் முயற்சியின் அடையாளம். நான் ஒன்று இரண்டு 100 வரை எண்ணிப் பழகிய நெல் மூடை களஞ்சியம் என்று அச் சிறு வயதினிலேயே ஆழமாக வந்துவிட்டது. அவர் மேல் உள்ள மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கடந்து உள்ளே போகும்போது அவருடன் அவருக்காக வேலை செய்வதற்கு எப்போதும் அங்கு இருக்கும் வேலையாட்கள். அவர்களை அவர் தன் பிள்ளைகளைப் போல் பார்த்ததை நான் நினைவறிந்த காலத்திலும் கண்டு வியந்திருக்கிறேன்.

ஒருவனை சுற்றி ஒரு கூட்டம் இருக்கின்றது. தகப்பனின் சொல் கேளாத எத்தனையோ பிள்ளைகள் இருக்க, உயர் அதிகாரிகளின் சொல் கேளாத எத்தனையோ ஊழியர்கள் இருக்க. தலைவனின் சொல் கேளாத எத்தனையோ தொண்டர்கள் இருக்க. உன் சொல் கேட்க உனக்காக ஒரு கூட்டம் இருக்கும் என்றால் அதை நீ வெறும் காசாலோ, பதவியாலோ பெற்று விட முடியாது. அது உன் ஆளுமையின் வெளிப்பாடு. நான் என் பெரியப்பாவை ஒரு ஆளுமையாகக் கண்டது அப்போதுதான்.

அவருடன் நான் இருந்த நாட்கள் என்னால் விரல் விட்டு எண்ணி விட முடியும். ஆனால் என் தகப்பன் அன்றும் இன்றும் என்றும் அவரை எங்கள் குடும்பத்தில் ஒருவராக அவரின் கதைகளை கூறிய வண்ணம் தான் வளர்த்துக் கொண்டிருக்கிறார். வாழ்க்கையின் அனுபவம் ஒரு மனிதனுக்கு பலவற்றைக் கற்றுக்கொடுத்துவிடும். நாம் ஒரு வேற்று மனிதனிடத்து 10 நிமிடம் உரையாடுகின்றோம் என்றால்கூட அவனின் அனுபவத்தில் இருந்து பலவற்றை எம்மால் கற்றுக்கொள்ள முடிகின்றது. அவ்வாறு நான் பலவற்றை என் பெரியப்பாவிடம் இருந்து கற்று இருக்கின்றேன். மனிதர்களை சம்பாதிக்கும் திறமை என்பது அவ்வளவு சுலபமானதொன்றல்ல.

வாழ்க்கை ஒரு மனிதனுக்கு என்றும் சந்தோசத்தை மட்டும் தந்துவிடப் போவதில்லை. அப்படி இருந்துவிட்டால் இத்தனை கோவில்கள் இத்தனை சாமிகள் எமக்கு மேற்பட்ட சக்திதான் எதற்கு நான் கண்டிருக்கிறேன். நான்நேரில் கண்டிருக்கிறேன். அத்தனை துயரங்களையும் தனியாக அவர் கையாண்ட விதத்தை சில சம்பவங்களை என்னால் வாழ்க்கையில் அவ்வளவு சுலபமாக மறந்து விட முடியாது. அதிலும் நான் சிலவற்றை என் பெரியப்பாவிடம் இருந்து கற்றுக்கொண்டேன். வாழ்வில் பிரயோகித்தும் இருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து விட்டால் உரை எழுதுவதும், போற்றி பேச்சு பேசுவதும் உலக நியதி. இருக்கும்போதே பேசப்பட்டவர் அவர். உதவி என்று வருபவர்க்கு இல்லை என்று சொல்லியதை நான் கண்டதே இல்லை. அதே போல் ஊரில் உள்ள எவருமோ, உறவுக்காரர் எவருமோ அவரைத் தவறாகப் பேசி நான் கேட்டதே இல்லை. இப்படிப்பட்டவரின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்று நான் அருகில் இருந்து பார்க்காவிட்டாலும் அவரின் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்றதை நான் உணர்வேன்.

கனத்த தொனி, நிமிர்ந்த நடை எல்லாம் எப்படி இருக்கும் என்று முற்கூட்டியே அறிந்தோ தெரியவில்லை எனது தகப்பனின் தகப்பன் அவருக்கு பெயர் வைத்திருப்பார்.

ஒரு அண்ணன் தன் தம்பிகளை எப்படி நடத்த வேண்டும். என்றது கற்றுக்கொண்டது அவரிடம் இருந்துதான். அது 90களின் முற்பகுதி. அந்தக் காலத்தில் துவிச்சக்கர வண்டிகளை உரிமை ஆக்கிக் கொள்வதே கடினம். அவ்வாறிருக்க தனது தம்பியின் திருமண பரிசாக கார் பரிசளிக்கப்பட்டதாக என் தகப்பன் சொல்லியிருக்கிறார். ஒரு அண்ணனாக என்னால் உணர முடியும். அது எவ்வளவு போதையானது என்று.

என் வாழ்வில் இத்தனை விடயங்களை எனக்கு கற்றுத் தந்தவர் இன்னும் எங்கோ ஒரு ஓரமாக என்னில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரின் சில குணவியல்புகள் அவ்வப்போது என்னில் வந்து போகின்றது என்று அப்பாவும் அடிக்கடி சொல்லி கேட்டிருப்பேன். அவ்வாறான மனிதன் இன்றும் என்றும் எப்போதும் எம்முள் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

அவரின் இறுதி ஊர்வலம் கூட எனக்கு பலவற்றைக் கற்றுத்தந்தது. யார் என்றே எனக்கு தெரியாத நூற்றுக்கணக்கிற்கும் மேற்பட்ட மக்கள் அவரை தாங்க என் தோள் நோக

 எனக்கு அருகே நின்றார்கள். அவர் வென்றது மக்களை.

***"I've learned people will forget what you said, what you did, But people will never forget how you made them feel"***

உங்கள் அன்பு மகன்
**திலக்ஷன் சபாரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *பாண்டியன் குளத்தின் சிற்றரசன்!*

பாண்டியன் குளத்தின் சிற்றரசனாய்
பவனி வந்த சித்தப்பாவே
பாலசிங்கத்தார் என்றால் தெரியாதோர்
எவரும் இல்லை. பலரையும் வாழவைத்து
சீருடனும் சிறப்புடனும் அன்ரியுடன்
அகமகிழ்ந்து இருந்த நாட்களில்
வந்தோரை வரவேற்று விருந்தோம்பி
இல்லறம் சிறக்க நன் மக்களைப் பெற்று
இன்பமுடன் வாழ்ந்த அந்நாட்கள்
என்றும் பசுமையானவையே
சூழ்ந்து வந்த துன்பங்களிலும்
துவண்டு விடாது ஒருவருக்கொருவர்
துணையாய் பிரியாது வாழ்ந்தீர்களே!
அன்ரியின் அன்பையும், அக்கறையையும்
கண்டு வியந்த நாட்கள் பலவுண்டு
சீறாது, சினக்காது எமக்கெல்லாம்
உணவூட்டி அரவணைத்த அன்னையே!
இறுதிவரைஇணைந்தே வாழ்வோம்
இணைபிரியாது இறையடி சேர்வோம்
என சென்றுவிட்ட அந்நாளை
எம்மால் நினைக்கவும் முடியவில்லை
மறக்கவும் முடியவில்லை சித்தப்பா
நீங்காத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அன்பு மகன் சிவா

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

**ஐயாத்துரை தயாபரன்**
*(ADE science Jaffna zone)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமான உத்தமர்!

பல சிறப்புக்களுக்கும் பண்பாட்டிற்கும் பெயர்போன நெடுநகராம் நெடுந்தீவில் நாகனாதி அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாக அவதரித்தார். பாலசிங்கம் அவர்கள். இவருடன் மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் உடன்பிறந்தனர். இவர்கள் அனைவரும் வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர் தனது ஊரில் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் தனது பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் தன்னால் இயன்ற அளவு ஒத்தாசைகள் செய்து அவர்களையும் வழிப்படுத்தினார்.

அரச பணிகளிலும் பார்க்க விவசாயத்தில் நாட்டம் கொண்டு தனது அத்தை மகளாகிய அருங்குணங்களைக் கொண்ட குணவதியான செல்வி -பூமணியை மணந்து பாண்டியன் குளத்தில் குடியமர்ந்தார்.

சிறந்த விவசாயியாகத் திகழ்ந்து. பலபேருக்கு வேலை வாய்ப்புக்களைக் கொடுத்து கிராமத்தில் எல்லோரலும் பேசப்படும் ஒரு மனிதனாக வாழ்ந்து காட்டினார்.

அவர்களது இல்வாழ்க்கையின் பேறாக ஆசைக்கோர் மகனும் ஆஸ்திக்கு ஒரு பெண்ணுமாக அவதரித்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தனர். பொருட்செல்வம், மக்கட்செல்வம் என யாதொரு குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இவரது ஆசை மகன் வெளிநாடு செல்ல விரும்பியதால் தனது தங்கை மகளை மணம் செய்து கொடுத்து வெளிநாட்டில் பெண் குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். மகளுக்கும் குணவானாகிய மணமகனை மணம் முடித்துக் கொடுத்து பேரப்பிள்ளைகளும் பிறந்து அவர்களை மேலும் சந்தோசப் படுத்தினர்.

இப்படி சிறப்புடன் வாழும் வாழ்க்கையில் பிள்ளைகளின் நோய் நொடியால் நொந்து போனார்கள். பிள்ளைகளுக்குப் பல சிகிச்சைகளை அளித்தும் பலனில்லாமல் இருவரும் ஒன்றன்பின் ஒருவராக இறையடி சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துயரத்தில் இருந்து மீண்டு மகனின் பேரப்பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவர்களிளன் அரவணைப்பில் ஆறுதல் அடைந்தனர்.

விதியின் விளையாட்டால் நெடுந்தீவு கோவில் உற்சவத்தில் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டு மனைவியுடன் பிறந்த ஊர் சென்றனர். அவரது மனைவியின் சகோதரிகளும் அங்கு சென்று சந்தோஷமாக எல்லோரும் ஆலயங்கள் சென்று வழிபட்டு மகிழ்ந்தனர்.

இரவு அனைவரும் மிகவும் உற்சாகமாக கடந்த கால நினைவு களை மீட்டு ஆனந்தமாக படுக்கைக்கு சென்ற வேளை எங்கிருந்தோ வந்து அவர் வீட்டில் வாடகைக்கு இருந்த மனித கொடிய நாகமொன்று அன்புச் சகோதரிகளையும் பாலசிங்கம் மாமாவையும் உறவினரான மைத்துனர் மகாதேவாவையும் தனது கொலை வெறியில் தீர்த்துக் கொண்டான்.

ஒரு பாவமும் அறியாத உத்தமிகளையும், நல்லதொரு குணசாலி யான மைத்துனரையும் உறவினரையும் அவர்களது வளமான வாழ்க்கையைச் சீரழித்து உறவினர்களினதும் பேரப்பிள்ளைகளினதும் நீங்காத துயரத்துக்கு உள்ளாக்கிய கொடிய பாவியை இறைவன்தான் தண்டிக்க வேண்டும்.

அவன் தண்டிக்கப்படுவதால் இவர்கள் வேதனை தீருமா? நல்லதொரு குடும்பங்களை நாசம் செய்த இவனது செயலை ஒரு ஏழேழு தலைமுறைகளின் துயரத்தை ஆற்ற முயடியுமா.

எல்லாம் ஒரு விபத்தாக முடிந்துவிட்டது. அவர்களது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

*அனைவரின் துயரங்களில் பங்குபற்றும் உறவினர்கள்*

**மைத்துனர் ப. கந்தையா (J.P)**

**மருமகள் க. இந்திரா**

(பாண்யன்குளம், வவுனிக்குளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாஞ்சலி!

எம் பாலசிங்கம் ஐயா எனக்கொன்றும் அப்போ அறிமுகமானவர் இல்லை. உறவினர் என்பதால் மகளின் இழப்புக்குப் போய் அன்று கண்ட நேசம் கலந்த பாசமான அரவணைப்பு என்னைத் தழுவிய போது காற்று தழுவுவது போன்ற உணர்ச்சிப் பிரவாகம் என்னுள் மனம் நுகர்ந்தது. ஐயோ எனக்கொன்றும் பெரிய முகவரி இருக்கவில்லை ஆனாலும் அவர் கரம் தழுவிய தடங்களில் ஏதோ பாசப் பசை தடவி விட்டார்.

அதன் பின் ஒவ்வொரு தடவையும் அவர் குடும்பத்தில் இழப்புக் களின் எண்ணிக்கை கூடக் கூட அவர் பெயரும் பாண்டியன் குளத்தின் ஊர் பெயரும் என் மனதில் ஆழ விழுது கொண்டு வளர்ந்தது.

கொலையுண்ட நாளுக்கு முதல் நாள் காலையில் அவரின் சகோதரரின் வீட்டில் காலை உணவை முடித்துக் கொண்டு நாம் வெளியில் போக முற்பட்ட போது என்னோடு வந்த நண்பரை அவர் நன்கு அவர் அறிவார். நான் சற்று படியின் கீழே நின்றதால் என்னை சரியாக அடை யாளம் கண்டு கொள்ளாததால் நண்பரிடம் யார் எனக் கேட்டதும் "ஓ தம்பியா நான் மதிக்கவில்லை" முதுமை வாசம் வீசும் உடலை வளைத்து என்னோடு தன்னிலையைக் கவர்ந்து பேச எண்ணிய அழகு இன்னும் என் கண்ணில் நிலையாய் நிற்கிறது.

"உங்களிடம் எனக்கு ஒரு உதவி வேண்டும்" என்று நான் கேட்கிறேன். "என்னிடம் என்ன.....?" அவர் கேட்டதன் அந்தக் கேள்வியின் முனைகளை ஆராய்ந்தால் ஆயிரம் பதில்களை அடுக்கலாம். ஆனால் நான் சுருக்கமாகச் சொன்னதும் "ஓ அதுவா நான் நாளை வந்து கதைக்கிறேன்" என்ற அந்த ஒற்றை வார்த்தையோடு நாங்கள் விடை பெற்றோம்.

மாவிலித் துறைமுகத்தின் வாசலில் தனிநாயகம் அடிகளாரைத் தாண்டினால் 20 மீற்றர் தொலைவில் செல்லம் மாமி என்று எல்லோராலும் அழைக்கப்படும் கருணைத் தாயின் வீடு. படகேறி வந்தவர்கள் யாராக இருந்தாலும் பஸ்சில் மேற்கூர் போகத் தாமதித்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கையால ஒரு வாய் தேநீர் குடிக்காமல் போனதாக வரலாறு இருக்காது. அப்படிப் பட்டவரின் சகோதரன் மனைவி வருகிறார்கள் என்று கண்டதும் அன்று அயலவர்களும் இவர்களின் பாச உரையாடலில் நனைந்திருப்பார்கள். உடலை வளைத்து என்னோடு தன்னிலையைக் கவர்ந்து பேச எண்ணிய அழகு இன்னும் என் கண்ணில் நிலையாய் நிற்கிறது.

மரண தண்டனை நிறைவேற்றும் நாளில் கைதிக்கு உணவு கொடுத்து ஆரோக்கியமாகத் தூங்க வைத்து மரண தண்டனை கொடுப்பார்கள். ஆனால் கருணைத் தாயே சமைத்து தானும் உற்ற உறவுகளும் சாப்பிட்டு கொலை செய்யப் போகிறவனுக்கும் தன் கையால் பரிமாறி அவன் உறங்க பாய் கொடுத்து தூங்க வைத்து அவன் கையாலேயே மரணம் பெற்ற ஒரு காவிய வரலாற்றுப் பகுதியில் அழியாத துயரத்தில் மாண்டு போனார்கள். குமுதினிப் படுகொலை இன முரண் பாட்டால் நடந்தது. இது ஒரு மனித மிருகத்தால் நடந்தது. பாண்டியன் குளத்தில் பல பாலசிங்கங்கள் இருக்கலாம் ஆனால் பாலசிங்கம் என்ற பெயரை உச்சரிக்கும் காலமெல்லாம் அவரின் இழப்பால் துயருறும் இரத்த உறவுகள் மட்டுமல்ல எம் போன்றோரின் விழிப் பறவையின் சிறகுகள் சில நிமிடம் நீர்த்திவலையில் தோய்ந்து கண் மடை குளமாகும் என்பது உண்மையே.

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!***

**சந்திரன் (ஆவூரான்)**
ஆவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் 72)

***எங்கள் தொப்பிழ் கொடி உறவுகளின்,
தொடர்புகளை வேரறுத்த கொடும் செயல்***

## மீளாத்துயரில் புதிய தலைமுறை

நெடுந்தீவு.

வாழுகின்ற மக்களுக்கு, வாழ்ந்தவர்கள் பாடமாக அமையட்டும்.

தமிழ் ஈழத்தின் தலைசிறந்த தீவாகத் திகழ்வது நெடுந்தீவு,
தனிநிர்வாகப் பிரிவைக் கொண்டதும் நெடுந்தீவே,
இலங்கைத்தீவின் முதல் கிராமமாகத் திகழ்வதும் நெடுந்தீவே.

இலங்கையின் முதல் கிராமசபைத் தலைவியானதும் நெடுந்தீவிலே
சு. நாகேந்திரர், (கொடுவேலி விதானையர்) அவர்களின் மனைவி,
திருமதி நா. செல்லம்மா அவர்கள் தெரிவானதும் நெடுந்தீவே.

இத்திருநாட்டில் இருந்து, தாய்த் தமிழ் நாட்டிற்கு,
உணவுப் பொருட்கள் அனுப்பிய பொன்நாடும் இதுவே.
இதை "ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" என்னும்,
பட்டணப் பாலையில் உள்ள வாக்கியம் பறைசாற்றி நிற்கின்றது.

நெடுந்தீவைப் பசுத்தீவு, பசுந்தீவென அழைத்த திருநாடு.
பொற்சீந்தில் கொடிபடரும் புதுமைநாடு,
அற்புதஞ்சேர் வெடியரசன் கோட்டைகட்டி வாழ்ந்த நாடு,
பெருக்கு மரம் தானே வளர்ந்து பெருமைதரும் திருநாடு,
பெருக்கு வீடுபோல் அமைந்ததொரு அற்புதமே,
அதைப்பார்க்க ஆயிரம் பேர் வருவதுண்டு

உடல் தளர்ந்தும் வந்தோரை வரவேற்கும் தாய்மார்கள் பிறந்த நாடு,
இத்தனை பெருமை தரும் பொன்நாடு, நெடுந்தீவு.
7 X5=35 சதுரமைல் கொண்ட தாய் நாடு.
நெடுந்தீவின் போக்குவரத்துக் கேந்திரமே, மாவிலித் துறைமுகமேதான்
அத்தனைக்கும் தலையாக விளங்குவதும் மாவிலியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிலி வீடு

அந்தக்கால நாகரீகத்திற்கமையவே அழகாகக் கட்டிய அரண்மனை. அது ஆயிரமாயிரம் ஆண்டுகள் பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்தமனை அது, அன்னப்பிள்ளை மாமியின் பரம்பரை பிறந்த மனை அது,
அன்னப்பிள்ளை மாமி, அவர் தம்பி நாகலிங்கம் அப்பாக்குட்டி
நாகநாதி பிறந்தமனை அது
அந்த வீட்டின் முன்னே, அருட்தந்தை தனிநாயக அடிகளாரின் அழகிய சிலை,

## பெரியதுறை வீடு

அழகான தீவின் ஆரம்பத் துறைமுகம் - மேற்கில் பெரியதுறையே,
அன்பே உருவான எங்கள் பெரிய மாமா,
இராமலிங்கம் அவர்களின் தந்தை, திரு.சு.கந்தையா அவர்கள்
சு. நாகேந்திரர் (கொடுவேலி) அவர்களின்
தாய் மாமா என்பது குறிப்பிடத்தக்கது.

எமது பெரிய மாமா அவர்களின் தாய்மனை,
யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை
அருகே அமைந்திருந்த வீடுதான் அது.
அதில் திரு. திருமதி. சு.கந்தையா வள்ளியம்மை
அவர்களின் மூத்தமகனேதான் இராமலிங்கம் அவர்கள்.

அவருக்கிணையாக 04 தம்பிமாரும், 04 தங்கைகளும் இருந்தனர்
திரு. சு. கந்தையா அவர்கள் நன்கு படித்தவர்
சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் முன் நின்று உழைத்த பெருமகன். ஆலயங்களில், தேவாரம், திருவாசகம் பாடுவதிலும்,
பயன் சொல்லுவதிலும், பிரசங்கம் செய்வதிலும்
அக்காலத்தில் சிறந்து விளங்கினார்கள்.

திரு. க. இராமலிங்கம் அவர்கள், அக்காலப்படிப்போடு பாய்வள்ளம் எடுத்து, படகோட்டியை வைத்து திரைகடலோடி வியாபாரம் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார்கள்,
பின்னர் இராமலிங்கத்தின் தம்பி க.கணபதிப்பிள்ளை சைவப்பிரகாச வித்தியாசலையில்
அதிபராகவிருந்து செயற்கரிய சேவை செய்து இளைப்பாறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சைவப்பிரகாச வித்தியாசாலையில் அண்மையில்,
இராமலிங்கத்தின் மருமகன்,
அபிராமிப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களின்,
மூத்தமகன் சத்தியவரதன் அதிபராகப் பல ஆண்டுகள்,
கடமையாற்றி பல ஆயிரக்கணக்கான கல்விமான்களை,
உருவாக்கிய பெருமை எங்கள் பரம்பரைக்கு சிறப்பேயாகும்.

சீரோடும், சிறப்போடும், பாய்வள்ளம் வைத்து,
பெரியதுறையிலிருந்து, ஊர்காவற்துறைவரை வணிகம் செய்து,
பல வசதிகளோடும் பல சகோதர, சகோதரிகளோடும்,
வாழ்ந்த வேளை திரு. க. இராமலிங்கம் அவர்களுக்கும்,
உறவுமுறை மைந்துனியான மாவிலி மாமி அன்னப்பிள்ளை அவர்களுக்கும்
மிகவும் சிறப்பாக, மாமியின் இல்லத்திலேயே,
திருமணம் நடந்தேறியது.
இல்லற வாழ்வைத்தொடர்ந்து,
திரு. க. இராமலிங்கம் அவர்களின் பாய்வள்ளம் உட்பட அனைத்தும்,
அக்காலப் பெரியதுறைத் துறைமுகத்திலிருந்து,
மாவிலித் துறைமுகத்திதை வந்தடைந்து,
வர்த்தகத்தை மிகவும் திறம்படச் செய்தார்கள்.

அன்று,
கொடுவேலியாரின் மைத்துனர், இராமலிங்கம் அவர்கள்,
பாய்வள்ளம் வைத்து பட கோட்டியை நியமித்து வாணிபம் செய்தார்கள்.
பின்னர் அவரின் பேரன் யோகேந்திரன் (செல்வன்) அவர்கள்,
1987இல் இயந்திரப்படகு வைத்து வாணிபம் செய்தமை பெருமைக்குரியதே.

## கொடுவேலியாரின் பேரன்,

நா. அமிர்தரட்ணராசா (இராசா அண்ணாவின்) மகன் பொன்னம்பலம் (பொன்னா) அவர்கள் 2023இல் நவீன முறையில் இயந்திரப் படகு வைத்து, மக்களுக்குச் சேவையாற்றுவதில் பெருமையடை கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்தனைக்கும் மேலாக "அறிவகம்"

அப்பப்பா திரு. சு. நாகேந்திரர் அவர்களின் பெயரில்
அனைவரும் போற்றும் அறிவகமும், வைத்து நடாத்தி
ஆண்டபரம்பரை மீண்டும் ஆளத் தொடங்கியமை பெருமைக்குரியதே.

### மாவிலிப் பணிமனை முன்னே

அத்தை, மாமா வர்த்தகப் பணிமனைக்கு முன்னே அழகான நிழல்குடை, அதில் வருவோர், போவோர் அனைவரும் தங்கி நின்று, தாகம் தீர்த்துப், போகாத பயணிகள், இல்லை எனலாம்.

அத்தனைக்கும் மேலாக,
நெடுந்தீவு, கிழக்கில்,
திரு. இராமநாதன் சுப்பிரமணியம் (கிளிவிதானையார்) அவர்கள்
திருமதி வேலுப்பிள்ளை பராசக்தி அவர்களின் தந்தை அவர்களும்
பின்னர் திரு. நாகலிங்கம் சுவாமிநாதர் (சங்கிலி விதானையார்) அவர்கள்
திரு. சு. முருகேசு (PT ஆசிரியரியரின்) தந்தை அவர்களும்,
நெடுந்தீவு மத்தியில் திரு. சு. நாகேந்திரர் (கொடுவேலி) விதானையார் அவர்களும் நெடுந்திவு மேற்கில் திரு. சு. இராமச்சந்திரர் (விதானையார்)
கொடுவேலி விதானையாரின் பெரியதாய் மகன் அவர்களும்
தமது கடமைகளைச் சிறப்புடன் நிர்வாகம் செய்து,
கொடிக்கட்டிப் பறந்த பொற்காலம் அது,

### உயர் அதிகாரி உடையார்

நெடுந்தீவின் நிருவாகம் சிறப்போடு இயங்கவே,
கிராம விதானைமார்களுக்கு,
உடையார் என்ற உயர் அதிகாரி கடமையாற்றிய காலம் அது,
நெடுந்தீவின் நிருவாகம் சிறப்போடு விளங்கியபோது
மாவிலி மாமி, மாமா அவர்களின் வியாபாரமும்,
அதி சிறப்போடு சேவை செய்தகாலம் பெருமைக்குரியதே.
பெரிய மாமா, மாமி அவர்களின், இன்பமான வாழ்நாளில்,
அன்பான ஏழு பெண்பிள்ளைகளும், ஒரு ஆண்பிள்ளையும்,
அந்த அரண்மனையிலேயே பிறந்து வளர்ந்து, படித்து, பருவமடைந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து, சிறப்புடன் வாழ்ந்த பிள்ளைகளேதான்,
ஆங்காங்கே சிட்டுப்பறவைகள் போல,
பாரிய குடும்பம், குடும்பமாகப் பிரிந்து பல இடங்களில் குடியேறினர்.

### அமரர் திருமதி நாகம்மா திரு. சு.சேதுபதி அவர்கள்

மாமாவின் மூத்தமகள்

திருமதி நாகம்மா அவர்கள் சு. சேதுபதி விதானையாரைத் திருமணம் செய்து நல்மக்களைப்பெற்று நெடுந்தீவு மேற்கில் சிறப்புடன் வாழ்ந்து, காலமானார்கள்.

### அமரர் இரா. கந்தையா அவர்கள்.

மாமாவின் ஏகபுத்திரன் திரு. இரா. கந்தையா அவர்கள்
காணி அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து நெடு/மேற்கில்,
கமலம் என்பவரைத்திருமணம் செய்து
சிறப்புடன் வாழ்ந்து நல்மக்களைப் பெற்றுப் பின் காலமானார்கள்

### அமரர் திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை அவர்கள்.

மாமா, மாமியின் மூன்றாவது பொன் மகளான, அமரர் பொன்னம்மா அவர்கள் திரு. நா. ஐயாத்துரை, (கிராமசபை உத்தியோகத்தர் அவர்களைத் திருமணம் செய்து நல்ல மகனான மூத்தமகன் காலமானார்.
அடுத்தமகன் அதிபராகவிருந்து, ஓய்வு பெற்றிருக்கின்றார்.
பொன்னம்மா அவர்களின் கடைக்குட்டியான தயாபரன் அவர்கள்,
யாழ்/கல்வி வலையத்தில் உதவிப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார்கள்.

### அமரர் திருமதி சு.வ.சு கோ.சிந்தாமணி அவர்கள்

மாவிலி மாமியின் கடைக்குட்டிதான்.

திருமதி. சிந்தாமணி அவர்கள் திரு. சு.வ.சு கோபாலசிங்கம் (S.K) அவரைத், திருமணம் செய்து, இரண்டு ஆண்பிள்ளைகளைப் பெற்றுச், சிறப்படன் வாழ்ந்து இனிதே காலமானார்கள்.

### அமரர் பூரணம் அவர்கள்

அமரர் திருமதி பூரணம், கனகரத்தினம் அவர்கள்,
பிறந்த மண்ணிலேயே, திருமணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதாழ்வில் (மன்னார்) குடியேறியவர்
இவரின் கணவர் தா. கனகரத்தினம்
மன்னாரில் பிரபல வர்த்தகர்

அமரர் பூரணம் அவர்கள், மாமிசம் உண்பதில்லை,
ஆனால். தினமும் அசைவம் சமைத்து
கணவருக்கும் கணவரோடு வரும் விருந்தினர்க்கும்
மனம் கோணாது உணவு பரிமாறும் பண்புடையவர்.

கணவனே கண்கண்ட தெய்வமென வணங்கினார்கள்
கணவர் இறந்ததில் இருந்து.

அமரர், பூரணம் அவர்கள் மரணிக்கும் வரை தினமும்,
காலை, மாலை எனக் கணவனைத் துதித்தபின்பே,
உண்பதும் உறங்குவதும் எனலாம்.
திருக்கேதீச்சரத்தானின், இறைபாதமே இவருக்குத் துணை

அமரர், பூரணம் அவர்கள் சிவ பக்தன் இறுதியில்
தன் தாய் மனையில் தங்கை வீட்டில் காலமானார்.

**மாதரசி திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம் அவர்கள்**
**மதிப்பிற்குரிய மாவிலி மகள்**

அன்றலர்ந்த தாமரைபோல் அவர் இருப்பார்.
அவர் என்றும் புன்சிரிப்பால் பூத்திருப்பார்.
அனைவரிலும் அன்பு வைப்பார்
அனுதினமும் விருந்தினரை அனுசரிப்பார்.

நாகரத்தினத்தின், நற்குணத்தால், நற்படிப்பால் நல்லதொரு வேல்தாங்கி வந்த
வேலாயுதபிள்ளை எனும் நற்குணத்தோன், கணவரானார்.
நல்லதொரு துறையான, காவல்துறையினிலே நற்பணியைச் செய்த நல்ல
அதிகாரி. நல்லதொரு மனைவிக்கு, நற்குணத்தோன் கணவனாகி

நானிலம் போற்றும் நல்லோரைப் பெற்றெடுத்த பெருமாட்டி,
நற்குணத்தான், பிள்ளைகளோ
நாடுதோறும், நற்பணியே சேவையெனச் செய்கிறாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைக்கும் மேலாக அம்மையரின் பேரர்களோ
நாகரத்தினத்தின் அறிவுரையால் அனைவருமே, கற்றறிந்த பிள்ளைகளாய்,
அவரவர் துறையினிலே மேதையாகி
ஆங்காங்கே வாழ்வதைக் காணலாமே

அன்னாரின் - மருமக்களோ,
அவருக்குக் கிடைத்த அரிய சொத்தாச்சே!
அன்னை எனும் நாகரத்தினம் அவர்கள்
அவரின் கணவரை இறுதிவரை.
தன் கண்போல் பார்த்த பெண்ணாச்சே!

இலண்டனிலே இன்பமாய் வாழ்ந்த அவர்
இங்கு வந்த கையோடு இருட்டறையில் மாண்டதென்ன

**திரு நாடலங்கரித்த மாதரசி. திருமதி அமரர் நாகசுந்தரி கார்த்திகேசு அவர்களின் மறக்க முடியாத நினைவுகள்.**

அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)
தமிழ் ஈழகத்தின் தலை சிறந்த தீவாகத் திகழும் நெடுந்தீவிலே. தாய், தந்தையரின் அரண்மனையில் பிறந்த அமரர் அவர்கள்.

தாய் மனைக்கு அருகே
அழகான வீடு கட்டி வாழ்ந்த காலம் அது,

"உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே!"
என்னும் பொன்மொழிக்கு அமைய
அமரர் அவர்கள் தமது இல்லம் தேடி வந்தோரை,
வரவேற்று, ஆதரித்து விருந்தோம்பி,
வழியனுப்பும் பண்புடையார்,

அமரர் என்றுமே சுறு சுறுப்பானவர்,
அவர் தன் சுய முயற்சியால், வெற்றிகண்டவர்.
அவர் சமையல் கலை, தையல்கலை எனப்,
பல கலைகளைக் கற்றறிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் நாகசுந்தரி பருவப் பெண்ணானதும்,
அவரின் பெற்றோர் உறவுமுறை மருமகனாக
குமுதினிப்படகு நடாத்துனர்
திரு. கணபதிப்பிள்ளை, கார்த்திகேசு என்பவரைத்
திருமணம் செய்து வைத்தனர்,
தம்பதிகள் இருவரும், ஒருடலும், ஈருயிரும் போல் வாழ்ந்தவேளை
அவர்களின் ஏகபுத்திரனாக
லோகேந்திரன் (செல்வன்) அவர்களைத்
தத்தெடுத்து வளர்த்து வந்தவேளை
செல்வன் அவர்களும் வளர்ந்து வந்த போது
சசி, சுசி ஆகியோரையும் தங்கள் பிள்ளைகள் போல
அவர்களுக்கும் பாலூட்டி தாலாட்டி வளர்த்தனர்
மூன்று செல்வ மக்களையும், வளர்த்து வந்த வேளை,

யாழ்/நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவை
மக்களுடன் வந்து கொண்டு இருந்த வேளை

**15.05.1985**

அன்று, பச்சிளம் பாலகன் உட்பட
36 பேர் இரத்த வெள்ளத்தில் மிதந்தவேளை
அன்றைய படகு நடாத்துனரான கார்த்திகேசு அவர்கள்
அன்றைய கொலையைச் செய்த
அரச படைகளுடன் வாதாடியபோது
அவருக்கும் ஆபத்துவரவே, கார்திகேசு அவர்கள்
கடலில் குதித்து நீந்தியவேளை
கடல்படைகளால் சுடப்பட்டு காலமானார்

**மீனாத்துயரில் நாகசுந்தரி**

அன்றைய படுகொலையையும்
அன்புக் கணவன் கார்த்திகேசு அவர்களின் இழப்பையும்
தாங்கமுடியாத காலம் அது.
அமரர் நாகசுந்தரி அவர்கள் இல்லறவாழ்வு
கணவன் மனைவியாக வாழ்ந்த காலம்,
ஆக 17 ஆண்டுகளேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனை இழந்த அந்த 38 ஆண்டுகளும், தமது கணவனை
அனுதினமும் வணங்கித் துதித்தார்களே தவிர
அவருக்கு வேறு தீய சிந்தனைகள் இல்லை எனலாம்.

அமரர் அவர்கள் தான் விரும்பி வளர்த்த
அக்கா நாகரத்தினம் வேலாயுதபிள்ளை அவர்களின்
லோகேந்திரன் (செல்வன்) அவர்கள்
வாலிபப் பருவமானதும்
அமரரின் அண்ணன் திரு. நா. கந்தையா (விதானையாரின்)
அன்பு மகளான யோகேஸ்வரி (யோகி)
என்பவரைத்திருமணம்செய்து சிறப்புடன்வாழ வழிகாட்டிய
பெருமைக்குரியவராவர் சிறப்புடன் வாழ்ந்த நாகசுந்தரி
வீட்டில்நடந்ததென்ன?

**பெண்ணரசி**

**பெருமைக்குரிய பெருந்தகை அமரர். கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களின் மறக்கமுடியாத நினைவலைகள்.**

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்"
அதற்கமைய, பெருவாழ்வு வாழ்ந்த பெருந்தகை
அம்மையார், மாவிலி மண்ணில் பிறந்து
அளவு மீறிய அன்புகொண்ட ஐந்து (05)
அக்காமார் மடியில் வாழ்ந்து.
அனைவரும் போற்றும்
அன்பு, அண்ணாவின் தோள் மேலும், கைமேலும்
அல்லும் பகலும் தவழ்ந்து விளையாடியவரே
அன்புக் கண் மணி - பிள்ளை எனலாம்.
கண்மணிக்கு அடுத்தவரே கடைக்குட்டி தவமேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்நிகரில்லாத் தலைவன்**

மாந்தை கிழக்கில் முடிசூடா மன்னன்.

மக்கள் போற்றிய மனேச்சர்

**அமரர்**

**திரு. நாகலிங்கம், அப்பாக்குட்டி, நாகனாதி பாலசிங்கம்**

**அவர்களின் நீங்கா நினைவுகள்**

"அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் 72)

தமிழ் ஈழத்தின் தலை சிறந்த தீவாகத்திகழும் நெடுந்தீவு மேற்கில்
தாய் மாமா, இராமலிங்கம் பிறந்த வீட்டில் பிறந்து,
அதே வீட்டில் வளர்ந்து.
அருகிலுள்ள யாழ்/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில், ஆரம்பக் கல்வியையும்,
பின் யாழ்/நெடுந்தீவு மத்திய மாகாவித்தியாலத்தில் படித்து,
அத்தனை பாடத்திலும் சிறப்புப் பெற்றமை திறமைக்குரியதே

வவுனியா, விவசாயப்பாடசாலையில் பயின்று பின்னர் கூட்டுறவுப் பயிற்சியில் சிறப்புப் பயிற்சி பெற்றுப் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் மனேச்சரானார்.செல்வபுரம், சிவபுரம் ஆகிய சங்கங்களில் சேவை செய்தார்.

திருமணப்பருவமடைந்த மகனுக்கு,
தாய் மாமன் மகளான,
கண்மணிப்பிள்ளை நெசவு ஆசிரியை அவர்களைப்
பெற்றோர் மாவிலி வீட்டில்,
மிகவும் சிறப்பாகச் செய்து வைத்தனர்.

அமரர் நா. பாலசிங்கம் அவர்களும், துணைவியாரும்,
மாந்தை கிழக்கில் அளப்பரிய சேவை செய்து வந்தனர்,
இருவரும், தான தருமம் செய்வதில் வல்லவர்கள்
கடவுள் பக்தியுடையவர்கள்.

பாண்டியன் குளம்பிள்ளையார், ஆலயத்திற்கும்
சிவபுரம் சிவன் ஆலயத்திற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு, நெழுவினிற்பிள்ளையார் ஆலயத்திற்கும் அளப்பரிய சேவை செய்யும் பக்தர்களாவர்.
இவ்வாறு, நல்மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்த வேளை

நெடுந்தீவு மாவிலிவீட்டில்
அனைத்து உடன் பிறப்புக்களுடனும்,
எமது அன்புறவு மகாதேவாவுடனும்
சிலதினம் அன்பாக இருந்து
உறவாடலாம் என எண்ணி
இருவரும் மாவிலியில் இருந்த வேளை.

**இருட்டறையில் கண்ட சோகத்தை மறக்குமா நெஞ்சம், 22.04.2023ல் அடுத்து வரும் அமர்கள் செய்த குற்றமென்ன. தாங்கொணத்துயரில் உறவுகள்**

பரிதாபம், ஈவிரக்கம், பாவமெனச் சொல்லும்.
பாவையர்கள் மலிந்த வீடு.
பசியென்று வந்தவனைப் பாவம் பார்த்த,
பெண்மணிகள் இருந்தவேளை,

**பசியாற உண்டவனே இயமனாகிப்**

படுபாவிக் கொடியவனே, கொலையைச் செய்தான்
எதற்காக அரிந்தாயோ, ஏன் இதைச் செய்தாயோ,
ஏன் இன்று கடும் சிறையில், கரிபோலானாய்
கொடியவனே, நீ செய்த நோக்கமென்ன
அன்னியனே! உனக்கும் ஒரு சாவு உறுதியாய்த்தானிருக்கு.

**அனைத்து ஆத்மாக்களும் சாந்திபெற வணங்குவோமாக!!**

356, திருநகர்
யோகபுரம்
28.09.2023

**பாலசிங்கம் (குடும்பம்)**
**ஓய்வு நிலை விவசாயப்போதனாசிரியர்**
**முல்லைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியாகிறதென் ஊர்!

இந்து மாக்கடலின்
அலைக்கரம் எழுந்து
மார்பிலடிக்க
மரணித்தழுகிறதெம் மாவிலி!

எம் பல்லாயிரம்
கனவுகளைப்
புதைத்து வைத்த என்
நெடுந்தீவே !

உன் உறவென இறுகப் பற்றிய
கரங்களை ஒவ்வொன்றாய்த்
தொலைக்கின்றோம் !

நீரெறியும் பாலத்தே
நெடுங்கதைகள் பேசுகையில்
கால் நனைத்து ஓடி மீண்டுவந்து
வாஞ்சையுடன்
கால் தழுவும் கடலன்னை!

எண்ணற்ற வருடமதாய்
எம்மவரின் நிழலெனவே
அரசமரக் குடையில்
நாம் காலாறி நின்ற
"தம்போரப்பா" கடை!

பாலசிங்கம் அண்ணா
கண்மணியக்காவுடன்
அங்கு தான் அன்பினால்
ஒன்றித்திருந்தீர்கள் !!

பாசத்தோடு உறவுமுறை சொல்லி
அழைக்க உங்களின் குரல்
இனியில்லை!

ஒளி நிறை கண்களோடு
அன்புப் பெருவூற்றாய்
உறவுகளைப் பேணும்
உங்களையும் நாமிழந்தோம்.

நெடுந்தீவுத் தெருக்களில்
தாயாகித், தந்தையாய்
எம் கண்முன்னால் நின்று
கிளையெறிந்த நல்லவரே
இன்று நீங்களும்
வீழ்த்தப் பட்டீர்கள்!

எல்லாம் இழந்து
தோற்றுத்தான்
போனோம் நாம்...

குமுதினியைப் போலவே
கூரிய கத்தியால்
குதறியெறிந்து விட்டுப்
போகிறது மறுபடியும் குரூரம்.

எம் உறவுகள் ஐவரையும்
எமைக்காத்த
வளர்ப்பு நாயையும் மட்டுமல்ல

இனி இந்த ஊரையும், உலகையும்
நசுக்காமல் விடாது அதிகாரத்தின்
காலடி!

விடியும் கிழக்கை
இருள் தின்று துப்ப
இருட்டாகிப் போனது
எம் இருத்தல் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100வருட வரலாறு
குருதிக் கடலினுள்
அமிழ்கிறது
காக்க முடியாது தோற்றுப்
போய்க்கிடக்கிறது எம் நிலம்.

கொத்து வெட்டுக்
களவு கொலை குருதியுடன்
எங்கள் நிலம் மறுபடியும்
இரத்தத்துள் தோய்கிறது....

பாதுகாப்பு எங்கள் பக்கத்திருந்தாலும்
பயத்தோடே எங்கள் பகலிரவென
இளையவர் தொலைந்த பூமியில்
இனி முதியவரும் இல்லை !

இது எமக்கான வீடில்லை
என்கிறது உள்ளுணர்வு !

இது எமக்கான கிராமம் இல்லையென்கிறது
வழிந்தோடும் குருதி !!

எதுவும் நடக்கலாம் என்கிற
அச்சத்தோடு ஊரை விட்டுத்
துரத்துகிறது அதிகாரம் !!
அதிகாரத்திற்கான வெற்றிக்
-களிப்பில் -
அகதியாகிறதென் ஊர்.

"அதிகாரத்தால் கொன்றொழிக்கப்பட்ட
அன்புறவுகளுக்கு என் ஆத்மார்த்த அஞ்சலி"

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

**மா. சித்திவிநாயகம் (சித்தி)**
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி!

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகநாதர் பாலசிங்கம் அவர்களினதும், அவரது மனைவி திருமதி. கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களினதும் அகால மரணம் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத பேரிழப்பாகும். அமரர் பாலசிங்கம் அவர்கள் நெடுந்தீவில் வாழ்ந்த காலத்தில் இருந்து எனக்கு நன்கு அறிமுகமானவரும், எனது நெருங்கிய உறவினரும் ஆவார். இவர் தமது இளமைப் பருவத்திலேயே செல்வபுரத் (பாண்டியன்குளம்) திற்கு குடிபெயர்ந்தார். அங்கு நீண்ட காலமாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளராகவும், பனங்காமம் கூட்டுறவுச் சங்க உப தலைவராகவும், இயக்குனர் சபை அங்கத்தவரா கவும், விவசாயக்குழு அங்கத்தவராகவும் இருந்ததுடன் கிராம முன் னேற்ற சங்கத்தில் இணைந்து மக்களுக்கும் கிராமத்துக்கும் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வந்தார். இவர் ஒரு சிறந்த விவசாயியாகவும் விளங்கினார்.

எல்லோரிடமும் புன்னகையுடனும், எவரையும் மனம் கோணாமல் நட்புடன் பழகும் தன்மையும் கொண்டவராக இருந்தார். பாண்டியன்குளம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் N.பாலசிங்கம் என்றால் தெரியாதவர்கள் இல்லை என்று கூறலாம். யாரைச் சந்தித்தாலும் முறை சொல்லிப் பழகும் தன்மை உடையவராகவும், உதவி கேட்பவர்களுக்கு மறுப்புச் சொல்லாமல் உதவி செய்யும் பண்பு கொண்டவராகவும், உறவினர்க ளுக்கும் குடும்பத்தாருக்கும் நல்ல வழிகாட்டியாகவும் விளங்கினார்.

அமரர் கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் வவுனிக்குளம் இரண்டாம் யூனிட்டில் உள்ள நெசவுச் சாலையில் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றினார். அப்பொழுது இருந்து அமரர் கண்மணிப்பிள்ளை அவர்களை நன்கு தெரியும். இவர் அமைதியும், பிறரை மதிக்கும் பண்பும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்களிடம் அன்பாகவும் பாசமாகவும் பழகும் தன்மையும் உடையவராகவும், பிள்ளைகளுக்குப் பாசமுள்ள அம்மாவாகவும், கணவருக்கு நல்ல மனைவியாகவும், அயலவர்களுக்கும் நண்பர்களுக்கும் நல்ல தோழியாகவும் இருந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவராவார். இவர்கள் இருவரும் எனது நெருங்கிய உறவினர்கள் என்பதில் பெருமை கொள்கின்றேன் .

அன்னாரின் பிரிவால் துயரும் பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் எங்கள் குடும்பம் சார்பிலும் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் (கனடா) சார்பிலும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இருவரின் ஆன்மாக்களும் சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

***ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!***

**நெடுந்தீவு சி.சு. நடராசா,**
தலைவர் ,
(நெடுந்தீவு பாடசாலைகளின்
பழைய மாணவர் மன்றம் - கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் நாகநாதர் பாலசிங்கம்**
**அமரர் பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை**
அவர்களின் தேகவியோகம் குறித்து
**துர்க்கேஸ்வரம், ரொறன்ரோ**
**ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் தேவஸ்தான பிரதமகுருவும்**
**நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையார் ஆலய பரம்பரை குருவுமாகிய**
**சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணேஷ்சுவாமிகளின்**

# பிரார்த்தனாஞ்சலி

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்."**

இறைவனால் அருளப்பெற்ற மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கணங்களிலும் நல்லதே எண்ணி, நல்லதே செய்து வாழும் பாக்கியம் பூவுலகில் யாரோ சிலருக்குத்தான் அமையும். தெய்வத்தின் திருவருளும் தன்முயற்சியும் ஒருங்கே திகழ, "வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்" அமரர் நாகநாதர் பாலசிங்கம் அவர்களும் அவரின் துணைவியார் கண்மணிப்பிள்ளை அவர்களும் என்றால் மிகையாகாது. எனது இளமைக் காலத்தில் அவரைக் கண்டு உரையாடி மகிழ்ந்த காலங்களை எண்ணிப் பார்க்கிறேன். நான் பணிபுரிந்த நெழுவினிப் பிள்ளையார் கோவிலின் முன்வீட்டில் வசித்தவர் அவர். கள்ளங் கபடமில்லாத வெள்ளை மனம் கொண்டவர். நெழுவினிப் பிள்ளையாரில்மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். சிவாச்சாரியார்கள் மீதும் பெரியோர்கள்மீதும் நன்மதிப்புக் கொண்டவர். தொண்டு புரிவதில் பிரியம் உள்ளவர். ஊர் வளர்ச்சியில் ஊக்கம் காட்டியவர்.

கோவிலின் பக்கத்தால் செல்லும் போதெல்லாம், உள்ளே வந்து என்னிடம் நலம் விசாரித்துட்டுச் செல்ல அவர் மறப்பதில்லை. நாட்டை விட்டுச் சென்ற பின்னரும், எனது நினைவில் அவர் முகம் அவ்வப்போது வரும். இறைவன் சோதனைகள் நல்லமனிதர்களுக்கே அடிக்கடி ஏற்படுகின்றது என்பது உண்மை போலும். தன் பிள்ளைகளை இழந்த பின்னரும், அந்தத் துன்பங்களையும் தாங்கி வாழ்ந்த இந்தத் தம்பதியினருக்கு ஏன் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது என்று என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாமே நேற்றுப்போல் இருக்கிறது.**
**இன்று அவர்கள் இருவரும் நம்முடன் இல்லை.**

"நீரில் குமிழிபோல் வாழ்க்கை"

பிறந்தவர் ஒருநாள் இறத்தல் நியதி. உருவத் திருமேனி மறைந்தாலும், அனைத்து மக்களின் உள்ளங்களிலும் அவர்கள் இருவரும் குடிகொண்டிருக்கின்றனர். வாழ்நாளில் அனைவரும் விரும்பத்தக்க வண்ணம் வாழ்வது சுலபம் அன்று. ஆனால் அந்தப் பாக்கியம் அமரர் பாலசிங்கம் தம்பதியினருக்கு கிடைத்திருக்கிறது. அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று.

**"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு, உயர் செல்வமெல்லாம்**
**அன்றென்றிரு, பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்**
**நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி**
**யென்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே"**

இறைசங்கமம் பெற்ற அமரர் நாகநாதர் பாலசிங்கம் அவர்களினதும், அவரின் துணைவியார் கண்மணிப்பிள்ளை அவர்களினதும் ஆன்ம சாந்திக்காக நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையாரையும், கரமத்தை கந்தனையும் பணிந்தேத்தி, அன்னை ஸ்ரீதுர்க்காதேவியைப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பு இயற்கை நியதி எனினும் மறக்க முடியாத இழப்பு....

மண்ணிற் பிறந்தோர் யாவர்க்கும் இறப்பு என்பது உறுதியானது. இது இயற்கை நியதி. ஆண்டாண்டுகாலம் அழுதுபுரண்டாலும் மாண்டார் வரமாட்டார்கள். இந்த உண்மையை யாம் அனைவரும் அறிந்தபோதும் சில மரணங்களில் மீள முடியாத துயருக்கு ஆளாகின்றோம்.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பும் இல்லை
எல்லாம் நன்மைக்கே"

என்று யோகர் சுவாமிகள் கூறியபடி அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும். அனைத்தும் வகுத்தான் வகுத்த வழியிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று தெரிந்த போதும் - நம் மத்தியில் வாழ்ந்த நெருக்கமானவர்களின் இழப்பு - அதுவும் திடீர் இழப்புக்களினால் துக்கம் ஏற்படவே செய்கிறது. இந்த வகையில் திரு. நா. பாலசிங்கம் அவர்களும் அவரது மனையாள் பூமணி அவர்களும் மறைந்தமை தாங்க முடியாத ஒன்று.

இருவரும் உற்றார் உறவினரோடு அன்போடும் பண்போடும் பழகியவர்கள். உறவினரை அரவணைத்து உயர்வடையச் செய்த பெருமைக்குரியவர்கள். நான் காணி உத்தியோகத்தராக - மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் கடமையாற்றச் சென்றநாள் முதலாய் நாற்பத்து மூன்று வருடமாக அமரர் நாகநாதன் பாலசிங்கம் அவர்கள் என்னுடன் பழகிய ஒருவர். இவர் தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் - பாண்டியன் குளம் சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையில் அங்கம் வகித்து ஆலயப்பணிகளில் அர்ப்பணிப்புடன் பங்கு கொண்டு சேவையாற்றிய துடன், ஏனைய பொது நிறுவனங்களுடனும் இணைந்து சமூக சேவையில் பங்கு கொண்டவர். இதனால் யாவராலும் அன்போடு மதிக்கத்தக்க ஒருவராக வாழ்ந்து வந்தவர். இத்தனைக்கும் உறுதுணையாக இவரது மனைவி வாழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பாலசிங்கம் அவர்களது கள்ளமில்லா உள்ளமும், கபடமற்ற மொழியும், வெண்மலராம் புன் சிரிப்பும் இனி நாம் காண்பதெப்போ?

இவர் இறுதியாகப் பாண்டியன் குளத்திலிருந்து யாழ்ப்பாணம் புறப்படுமுன் - முதல்நாள் - இவரது இல்லம் சென்று அவருடனும் அவர்தம் மனையாளுடனும் மகிழ்ந்துரையாடியதை எண்ணும்போது மிகுந்த வேதனை ஏற்படுகின்றது.

இப் பூமி வாழ்வில் மிகவும் நேர்மையாகவும் தர்ம சிந்தனையுடனும் அன்பும், பண்பும் கொண்டு வாழ்ந்து அமரத்துவமடைந்த நாகநாதன் பாலசிங்கம் அவர்களும் அவரது மனைவி பூமணி அவர்களும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்ற வள்ளுவனின் பொய்யா மொழிக்கமைய - சிவப்பரம் பொருளின் திருவடிகளில் சாந்தி பெறுவீர்கள் என்பதில் ஐயுறவில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. சி. நடராசா,**
தலைவர்,
பாண்டியன்குளம் சித்திவிநாயர்,
ஆலய பரிபாலன சபை,
ஓய்வுநிலை காணி உத்தியோகத்தர்
மாந்தை கிழக்கு, துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்றன்று – நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"



அமரர்கள்

## நாகனாதி பாலசிங்கம்
## பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை

அவர்கள் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வங்களின் துயரச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமும், அஞ்சலி பிரசுரங்கள், பதாதைகள் மற்றும் மலர் வளையங்கள் வைத்தும் உதவி ஒத்தாசை புரிந்த அன்புள்ளங்களுக்கும் அவர்களது அந்தியேட்டி, சபண்டீகரணத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும் இம்மலரை சிறப்புற அச்சிட்டு வழங்கிய நியூ எவகிறீன் அச்சகத்தாருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

* **நாகனாதி**
+
* **அன்னப்பிள்ளை**
↓
சிந்தாமணி
***பாலசிங்கம்**
புவனேஸ்வரி
கடாட்சம்
சிரோன்மணி
வைத்திலிங்கம்
சபாரட்ணம்
லோகேஸ்வரி

* **இராமலிங்கம்**
+
* **அன்னப்பிள்ளை**
↓
* நாகம்மா
* பூரணம்
* கந்தையா
* பொன்னம்மா
* நாகரத்தினம்
* நாகசுந்தரி
* **கண்மணிப்பிள்ளை**
* சிந்தாமணி

(பாலசிங்கம் + கண்மணிப்பிள்ளை)
↓

* ஜெயபவான் (ஜீவா)
+
சுமணா
↓
அட்சகி

* சுபாஜினி (றாஜி)
+
பரமானந்தம் (பரணி)
↓
கேதுசன்
கோபிநாத்
வினோஜா

* அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது,
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



**"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"**

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

நியூ எவகிறீன் அச்சகம் (Pvt) Ltd. யாழ்ப்பாணம். 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org